

ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு

ம| வ / ந| ஊ| உ| இ| எண்:153/2024

நகர் ஊரமைப்புத்துறை – விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம் , தேவனூர் கிராமம் , சர்வே எண்கள் :123/9பி, 123/10எ மற்றும் 123/37எ ஆகியவற்றில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண்: 2ULMR1CV /2025/TCP

அளவு 1 : 400

குறிப்புகள்:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பு : 0.24 ஏக்கர் (976 ச.மீ)

மனைப்பிரிவின் எல்லை

நிலையில் உள்ள சாலை

உத்தேச மனைப்பிரிவு சாலை

ஒதுக்கிய மனைகள் : 06

பொது ஒதுக்கீடு

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

மனைப்பிரிவு சாலைகள் (ம) ரூலைடுடக்குகள்: **129.125** ச|மீ

உள்ளாட்சி : **6.25** ச|மீ (0.73%)

மின் வாரியம் : **6.25** ச|மீ (0.83%)

கட்டிட வரம்பு

7|20மீ முதல் 9|0 மீ சாலை வரை 1|5மீ விடப்பட வேண்டும்

9|0 மீட்டருக்கு மேல் 18|0 மீ சாலை வரை 3|0மீ விடப்பட வேண்டும்

ரூலை டுடக்கு

12|0மீ அகல சாலை வரை 1|5மீ x 1|5மீ விடப்பட வேண்டும்

நிபந்தனைகள்

1| இம்மனைப்பிரிவிற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்தத்துறையாலும் நில ஆர்ஜிதம்செய்யப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் பட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்படவில்லையென்று உறுதி செய்து கொள்ளவேண்டும்|

2| நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்புஆணையர் அவர்களால் ரத்து செய்யப்படும்|

3| இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கபடும் மனைப்பிரிவில் மனைகள் வாங்கும் ஒவ்வொருமனுதாருக்கும் ஒப்புதல் அளிக்கபட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும் |

4. இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்பந்தப்பட்ட இடத்தில் 5' X 5' என்ற அளவிற்கு குறையாமல் கான்கீரிட் நகவல் பலகையில் நிரந்தரமாக வரைந்து வைக்கப்பட வேண்டும்|

5| அரசாணை எண்: 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04| 02| 2019 –ன் படியான தமிழ்நாடு ஒருங்கினைந்த (ம) கட்டிட விதிகளின் படி பொது ஒதுக்கீட்டிற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது|

6| The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

7| நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் முலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை| தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது| அதன் முலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது| சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்| மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம்| இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல|

8| பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு (EWS) ஒதுக்கப்படும் மனைகளைஉட்பிரிவு (மற்றும்) ஒருங்கினைப்பு செய்தல் கூடாது|

9| மனைப்பிரிவின் ஊடே செல்லும் வாய்க்காலினை ஆக்கிரமிப்புகள் செய்தல் கூடாது| மேலும் வாய்க்காலின் நீர்வழி பாதையினை தடை செய்யாதவாறு உரிய துறையின் தடையின்மை சான்று பெற்று சிறு பாலம் அமைக்கப்பட்ட பின்னரே மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்| விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ம| மு| எண்:ஆ9/1694657/2024, நாள்:15.03.2024 –ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்|

ம| வ / ந| ஊ| உ| இ| (வி| மா) எண்: 23/2025 (இணையதள ஒப்புதல்)

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விழுப்புரம் மாவட்டம்

அளவர் / உதவி வரைவாளர்

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Vilupuram
Date:2025.01.25 18:04:40

ல – 3

மேற்பார்வையாளர் / வ.நி – 2